உ

முருகையன் துணை.

பழனி ஆண்டவர் கீர்த்தனை முதலானவைகள்.

இரண்டாம்பாகம்

இவை,

மு - காமியப்பக்கவிராயர்

குமாரராகிய

துரைசுவாமிக்கவிராயரால்

இயற்றப்பட்டு,

ஊ புஷ்பரதசெட்டியாரால்

தமது

சென்னை

கலாரத்நாகரம் என்னும்

அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டன.

பிரஜோற்பத்தி௵ ஆவணி௴.

REGISTERED COPY-RIGHT.

முருகையன்துணை.

கீர்த்தனைகளின் முதற்குறிப்பு
அ க ரா தி.

பாகம்—௨.

அ	பக்கம்.	கா	பக்கம்.	பா	பக்கம்
அப்பாபழனி	௯	காட்பாரா	௬	பாரையாகடைக்	௧௩
அரகரசிவ	௭	**ச**		**பே**	
அருள்கொடு	௮	சராசரவுயிர்	௨௩	பெண்டுபிள்ளை	௧௯
அறியாதது	௯	**சா**		**ம**	
ஆ		சாமியேழை	௭	மகிமைபொய்யா	௩
ஆறொன்மனத்	௧௪	**சி**		**மு**	
இ		சிவசண்முக	௨	முப்பதுதினங்க	௧௫
இதுஞாய	௧௭	**சோ**		**வீ**	
இரக்கமில்லையே	௧௨	சொல்வதைக்	௧௬	வீணிலே	௧௦
இனிசகிக்	௧௩	**த**		**வே**	
எ		தண்டதராமூர்	௨௬	வேண்டேன்	௧௧
எப்படிக்கடை	௨௪	தண்டாயுதபாணி	௫	வேதமுடிக்கு	௨௭
எப்படிசகிப்	௨௨	**நா**		**வை**	
எதுக்கென்று	௨௫	நானென்ன	௨௦	வையாபுரி	௪
ஏ		**நே**		**லா**	
ஏனோஇதுசரி	௬	நெயவேற்கரா	௨௮	லாலிலாலி	௨௮
ஐ		**பா**			
ஐயனேட்பாடு	௧௧	பாபிஷ்டிசென்	௧௮		
ஒ		பாவியென்று	௨௧		
ஓம்சிவசரவண	௧	பாரையாமன	௪		

திருவொற்றியூர் தியாகர்கீர்த்தனம் ௩௦

ஷை வடிவாம்பிகை கீர்த்தனம் ௩௦

பழனியாண்டவாமாலை ௩௨

ஞாயிறு - புஷ்பரதேஸ்வரர் தோத்திரம்... ... ... ௩௯

ஷை சொர்ணாம்பிகைதோத்திரம்... ... ... ௪௧

பழனியாண்டவர் பஞ்சரத்தினம் ௪௩

விடுபாட்டுகள்,.. ... ... ௪௪

உ

முருகையன் துணை.

பழனி ஆண்டவர்

கீர்த்தனை.

காப்பு.

பின்முடுகு வெண்பா.

சீராரு மன்பர்துன்பந் தீர்க்கும்வடி வேன்முருகன்
பேராருங் கீர்த்தனங்கள் பேசவே—ஏரார்
உதயசந்திர வதனிதந்த வுசிதசந்தி யெனதலர்ந்த
இதயம்வந்து கொலுவிருந்த தே.

இராகம் - தர்பார்; தாளம் - ரூபகம்.

பல்லவி.

ஓம் சிவசரவணபவ - ஓம் சிவசரவணபவ
ஓம் சிவசரவணபவனே.

அநுபல்லவி.

பாமரனைக்கொத் தடிமைகொளுந்தற்
பரா பரா ஹரா ஹரா - (ஓம்சிவ)

சரணங்கள்.

உயர்மானிடமெனக்குத்தந்த தன்னைநாடவோ - நல்ல
உணர்விலாவனமிருகம்போலவுன் டிறங்கிவாடவோ
செயலேதோ அறியேன் - உனைத்
தியானஞ்செய்யாச் சிறியேன் - தயை
செய்வாய்வை வேலெடுத்திடு
தீர வீர முத்துக்கு மார - (ஓம்சிவ)

அருள்செய்சதாகாலமுமுன் னடித்தொண்டுசெய்ய - எனக்
கதனிற்சிறந்ததொன்றுண்டோவிவ் வவனியிலுய்ய
மருளகன்றன்பு கூர - நாயேன்
மனத்துயரெல்லாந் தீர - தோகை
மயின்மிசை வருவாய்பன்னிரு
வாக யோக ஞான போக - (ஓம்சிவ)

கானக்குறப்பெண்ணுந்தேவர்துரைப்பெண்ணுங்காதல்செய்கட்டழகா-உள்ளக்
கலக்கமகன்றிடத்துரைசுவாமியைக் காக்குஞ்சண்முகா
வானவர்பணி பாதா - வள
மருவும்பழனி நாதா - ஆறு
மங்கையர்கொங்கை யமுதுண்ணும்விஸ்
வாச நேச ஸ்வயம்பிர காச - (ஓம்சிவ)

கலிவிருத்தம்.

சீரார் குறவள்ளி தனஞ் செயியுந்
தாரார் தருமார்ப தடங்கை திகழ்
கூரார் வடிவேற் குகனே யெனையாள்
தேரார் பழனிச் சிவசண் முகனே.

இராகம் - கேதாரம்; தாளம் - ரூபகம்.

பல்லவி.

சிவசண்முக சிவசண்முக
சிவசண்முகதேவா.

அநுபல்லவி.

பவசங்கடந் தனையோட்டு
பதமீழலி லெனைக்கூட்டு - (சிவசண்முக)

சரணங்கள்.

அருமானுடந் தனையுற்றேன்
அதனாலென்ன பலன்பெற்றேன் - (சிவசண்முக)

சும்மாஇருப் பதுநேரோ
துயர்தீர்த்தெவ ரருள்வாரோ - (சிவசண்முக)

குறைகேட்டிலை யென்செய்வேன்
கொடும்பாவியெவ் விதமுய்வேன் - (சிவசண்முக)

நாளுங்கவ லையினாலே
நலிவேனோ புவிமேலே - (சிவசண்முக)

இருகாலெரு தாவேனோ
இணைத்தாட்கன்ப னாவேனோ - (சிவசண்முக)

அறியேன்உன் செயலேதோ
ஐயாவுள மிரங்காதோ - (சிவசண்முக)

விளைவாயுனக் காளாக்கு
மின்னூர்மய லினைப்போக்கு - (சிவசண்முக)

படைத்தாயுனே யல்லாது
பார்மேலுற்ற துணையேது - (சிவசண்முக)

வெண்ணீறக்க மணிபூண்டு
வேண்டித்துதி செயத்தூண்டு - (சிவசண்முக)

காலம்வீணுக் கழிக்காதே
கனிந்தாண்டரு ளிப்போதே - (சிவசண்முக)

துரைசுவாமியென் துயர்யாவும்
தொலைப்பாய்பழ னியில்மேவும் - (சிவசண்முக)

இராகம் - உசேனி; தாளம் - ரூபகம்.

பல்லவி.

மகிமை பொய்யா - தென்பழனி
மலைக்குழந்தை வடிவேன்முருகையா.

அநுபல்லவி.

மகிமையென்னள வினிற்செல்லாதா
மனத்துயரையுன் னருள்வெல்லாதா - (மகிமை)

சரணங்கள்.

முன்னாளமரர்பொன் னுலகஞ்சேர
முத்தமிழ்ப்பாவலன் றன்னிடர்தீர
என்னாளுந்தொண்டர்கள் மனவிசார
மில்லாதளிக்கு முனதுகெம்பீர - (மகிமை)

இந்தக்கலியுகத் தினிற்சந்தேக
மெள்ளளவேனுமி ராமலனேக
விந்தைகள்காட்டி யடியார்நன்ருக
வேண்டும்பலவரந் தருந்தெய்வீக - (மகிமை)

சமைத்துக்காவடி தன்னிற்கட்டிய
சாதநின்சந்நிதி வைத்துத்துதிசெய
அமைத்துநாட்சென்று மப்போதுசமைய
லானநல்லன்னமாய்க் காட்டுமதிசய - (மகிமை)

பதினாலுலகுங் காக்கவல்ல
பரனேஏழையைக் காக்கநல்ல
கதியெனத்துரை சுவாமிசொல்ல
சற்றுமிரங்கா ததுதர்மமல்ல - (மகிமை)

இராகம் - தன்னியாசி; தாளம் - ஆதி.

பல்லவி.

வையாபுரி முருகையா - வேத
வாக்கியா சைதன்னியா சிலாக்கியா.

அநுபல்லவி.

ஒய்யாரநடந மிடுமாயூரா
உலகசராசர வுயிர்க்காதாரா - (வையாபுரி)

சரணங்கள்.

கனவிலாயினும் என்முன் நில்லாயோ - நின்றென்
கவலைதீரவுபாயம் சொல்லாயோ
மனதகுறைகளை யாருடன்சொல்லியாறுவேன்
மருவுமிப்படியிலெப் படிகடைத்தேறுவேன்-(வையாபுரி)

உன்னைநோவாமல்யானா நோவேனோ - நாயேன்
உளத்துயரந்தீர்ந்தென்று ளாவேனோ
என்னைதனுகரணந் தந்தவனீதானே
இயாதொன்றுமறியார்போலிருந்தாலென்செய்வேனே-(வையாபுரி)

உனக்கோதொண்டர்க ளனந்தம் - ஆயினும்
உன்னிருசரணார விந்தம்
நினைத்துத்துதிசெய்துனா சுவாமியின்மீது
நிகரிலாக்கருணை கடாக்ஷம்வைப்பாயிப்போது-(வையாபுரி)

இராகம் - பியாகடை; தாளம் - ஆதி.

பல்லவி.

பாராயா மனமிரங்கியநுதினம்
பராமுகமா யிராமலேழைத்துயர்தனைத் தீராயா.

அநுபல்லவி.

ஆராயாவுனை யல்லாலடியவர்க் கருள்செயவல்லார்
சேராயாஎனைத்தொண்டர்தொகைதனில்
திகழ்தரு முயர்சிவ கிரிமுருகையா - (பாராயா)

சரணங்கள்.

ஆதிமூல நாயகா
ஆதாரபுவன தாயகா

பாதிமதி யிலகுஜடாதரி
பார்வதிப்ரியநந்தன காருண்ய
சோதிவடிவேலேந்து
சுலக்ஷண்ய கண்ய சுப்பிரமண்ய - (பாளையா)

மாயாபேத காரண
வாணுதியுலவு பூரண
ஆயமுனி வரர்வானுடர்கள்
துதிசெய்பாத சிந்தூரசரீர
தாயாயென்னை யாதரவுசெய்
தயாகார தீர முத்துக்குமார - (பாளையா)

வீரசூர மர்த்தன
வேதாந்தமுடிவில் நிர்த்தன
சீருபரதுனைசுவாமிக்கருள்புரி
தெய்வயானைவள்ளி நாயகிசமேத
பாருந்தொழுதேத்தும்
பழனிநாத நீத அதிப்ரபோத - (பாளையா)

இராகம் - தோடி; தாளம் - ரூபகம்.

பல்லவி.

தண்டாயுதபாணி சேர்வை
கண்டார்க்கிடரண்டாது.

அநுபல்லவி.

வண்டார்ந்திசை பாடுந்துழனி
தண்டாமரைத் தடஞ்சூழ்பழனித் - (தண்டாயுத)

சரணங்கள்.

தேவர்களின் கினரகரி
தினமுந்துதி குமரி
பாவசிவா ரணிசங்கரி
பாலனுய ருஞ்சிவகிரித் - (தண்டாயுத)

தாரகசூர சம்ஹார
சங்கிராமகெம் பீர
தீரவீர மாயூர
சேவகமுத்துக் குமார - (தண்டாயுத)

சோகவிமோசன விசால
துளாசுவாமிசொல் மூல
தியாகபோக ஞானசில
தேசிககாங்கேய பால - (தண்டாயுத)

இராகம் - செஞ்சுருட்டி; தாளம் - ஆதி.

பல்லவி.

ஏனோ இதுசரி தானோ.

அநுபல்லவி.

பானோதயஸ்வயம் பிரகாசசரீரா
பரவும்பழனிமலை யுறையுமுத்துக்குமாரா - (ஏனோ)

சரணங்கள்.

அடிமைகள்செய்கிற துண்டபசாரம்
ஆண்டவனீபொறுப் பதுவேபாரம்
படியிலுன்னடியலா திலையேஆதாரம்
பத்தன்மீதிலுனக் கித்தனைகரோம் - (ஏனோ)

ஆறுமுமையனே ஈதனியாயம்
அடுத்தோராயாதரிப்ப தல்லவோநேயம்
நாளுவிதப்பாடு படுத்துவதோசகாயம்
நம்புமாயேனைவம்பு செய்யுமுபாயம் - (ஏனோ)

வளருங்கவலையினால் வருமனஸ்த்தாபம்
வருத்துதேநீவர்மமா யிருப்பதிலென்னலாபம்
தளராதெனைக்காத்தருள் புவனமெங்கும்பிரதாபம்
தழைக்கும்பழனியப்பா துலாசுவாமிமேற்கோபம் - (ஏனோ)

இராகம் - கமாஸ்; தாளம் - ஆதி.

பல்லவி.

காப்பா ராராயா - என்தனைக்
காப்பா ராராயா.

அநுபல்லவி.

காப்பாராராயா கதிர்வேன்முருகையா
பூப்பாதநம்பிநின்று போற்றும்ஏழையென்று-(காப்பா)

சரணங்கள்.

அடுத்தவுன்னடிமையை அம்புவிமீது
தடுத்தாட்குமாகுரு சாமியுனையல்லாது - (காப்பார்)

வெறுத்தாலுநீயென்பிழை பொறுத்தாலுநீயேயிலை
நிறுத்தியாதரித்திட நீயல்லால்வேறிலை - (காப்பார்)

கஷ்டமெல்லாந்தொலைத்துக் கவலையைநீக்கி
துஷ்டமனந்திருத்தித் தொண்டரிலொருவனுக்கிக் - (காப்பார்)

கூவிக்கூவிச்சொல்லுமென் குறைகளைக்கேளாது
பாவியென்றுபராமுகம் பண்ணினுலினித்தாளாது - (காப்பார்)

சகலபுவனரக்ஷக னீயெனத்தெரிந்து
புகழுநாயினேன்றுனை சுவாமிக்கருள்புரிந்து - (காப்பார்)

கண்ணிகள்.

இராகம் - உசேனி; தாளம் - ரூபகம்.

அரகரசிவ சண்முகநாதா - இந்தஏழை
அடிமைமீதில் மனமிரங்காதா

சித்தர்பணியும் பழனித்தேசிகா - தயையில்லாமல்
பத்தன்மேலடம் சாதித்தலழகா

சர்வாந்தரி யாமியல்லவோ - நூறுயிரந்தரம்
நிர்வாக மெடுத்துச்சொல்லவோ

பழனிமாமலை முத்துக்குமாரா - நாயினேனை
முழுதுஞ்சோதனை செய்வதுநேரா

கடிமலர்க்கடம் பணியுங்காங்கேயா - நின்திருவடிக்
கடிமையாக என்னையாளாயா

தொண்டர்வினைதீர்க்கும் கதிர்வேற்கையனே - துரைசுவாமியை
கொண்டுகாத்தருள் பழனியையனே [யாட்

இராகம் - கானடா; தாளம் - ரூபகம்.

பல்லவி.

சாமியேழை நானையா - உன்
சரணநம்பி னேனையா.

அநுபல்லவி.

வாமிசிவ காமிதந்த
வையாபுரி வாழுங்கந்த - (சாமி)

சரணங்கள்.

சொல்லச்சொல்ல வர்மமோ - இன்னம்
சோதிப்பதுவும் தர்மமோ
நல்வழிகாட்டு வீணாள்கழித்து
நாயேனலையாமற் பழனிமுத்து - (சாமி)

ஒன்றுமறியாத தல்லவே - என்
உள்ளக்குறைதனைச் சொல்லவே
குன்றுதோறுடிய சற்குருராயா
கொண்டாடுஞ்சிவ கிரிகாங்கேயா - (சாமி)

விரைமறைமலர்ச் சண்முகா - யாரும்
வேண்டுந்தமிழ்முனித் தேசிகா
துரைசுவாமிதொழுஞ் சூரசம்மார
துதிசெய்யாவினன் குடிகுமார - (சாமி)

இராகம் - சுருட்டி; தாளம் - ரூபகம்.

பல்லவி.

அருள் கொடுப்பான் - வேண்டும்
பொருள் கொடுப்பான்.

அநுபல்லவி.

மருள்கெடுத்தெனை யாளுந்தூய்யன்
தெருள்கொடுக்குந் தணிகைமுருகையன் - (அருள்)

சரணங்கள்.

பேதை விவேகன் - மட
மாதர்கள் மோகன்
ஆதலால்நாயேனுக் கன்புண்டாக்கி
வேதனைக்கலக்கந் தன்னைப்போக்கி - (அருள்)

பொன்னடிக் கன்பு - செய்யு
நன்னய மின்பு
அன்னைதந்தைகுரு தெய்வமாய்நாடில்
இன்னிலத்தடிமை கொண்டெனைத்தேடி - (அருள்)

தென்பழனித் தெய்வம் - துதி
அன்பர்குல தெய்வம்
இன்பாய்த்துரைசுவாமி சொன்மாலைபூண்டவன்
என்பவனீக்குந் தணிகையாண்டவன் - (அருள்)

இராகம் - ஆனந்தபைரவி; தாளம் - ஆதி.

பல்லவி.

அறியாததுமொன்றுண்டோ மெய்யா - எல்லாம்
அறிந்தும்எனைச்சோதிக்க லாமோமுருகையா.

அநுபல்லவி.

பிரியாதென்னுள்ளேயிருந் தாட்டுவிப்பாய்நீ
பேயேன்மனக்குறைகள் பழனியப்பாநீ - (அறியா)

சரணங்கள்.

உள்ளத்துயரம்இனி மேலும் - என்னால்
ஒறுக்கமுடியாதையா கரையேற்றினாலும்
பள்ளத்திலெட்டித்தள்ளி னாலும் - உன்தன்
பாரம்ஏழையடிமை நிருவாகமெக்காலும்
(அறியாததும்)
பழிக்கும்பாவத்திற்குமே நாயே - னாய்ப்
பாதவித்துழலவோ எனைப்படைத்தாயே
செழிக்குநின்பதாம்புஞ் சேயே - னென்ன
செய்வேன்துயரொழித்தாண் டருள்செய்வாய்நீயே
(அறியாததும்)
கன்மவினைதொலைய நானே - மனக்
கண்ணாலுன்கட்டழகை யென்னாள்தெரிசிப்பேனே
வன்மமேன்துரைசுவாமிக்குத் தானே - சுக
வாழ்வருள்பழனிமா மலையெம்பிரானே
(அறியாததும்)

இராகம் - காம்போதி; தாளம் - ஆதி.

பல்லவி.

அப்பா பழனிமலை யாண்டவனே.

அநுபல்லவி.

இப்பார்மிசைநிதமும் தப்பாயிரஞ்செய்நாயே
னைப்பாதுகாத்து ரக்ஷிப்பாயெப்போதும்நீயே - (அப்பா)

சரணங்கள்.

தொண்டுசெய் துன்னருள் பெற்றோரனேகம்
தோன்றினநாள்முதலாய்த் துயர்தனிற்சோகம்
கொண்டுழல்மூடனுனைக் கொண்டாடும்விவேகம்
கொடுத்தெனையாள்வ தல்லவோதெய்வீகம் - (அப்பா)

பாதகனைக்கடைக்கண் பார்ப்பதேபாரம்
பத்தர்க்கருள்வதியற்கை அதிலென்னசாரம்
மேதினியிலுன் திரு வடியேயாதாரம்
வேறில்லையேஐயனே கோடிநமஸ்காரம் - (அப்பா)

போற்றுந்துரைசுவாமியை யாண்டருள்புரியாணிப்
பொன்னேசிந்தாமணியே என்மனக்கேணி
யூற்றெடுக்குந்தெள் ளமிர்தேகலைவாணி
யுறைபழனிபால தண்டாயுதபாணி - (அப்பா)

இராகம் - தோடி; தாளம் - ஆதி.

பல்லவி.

வீணிலே போகிறதே - ஐயனே
விழலுக்கிறைத்தநீர்போ லாகிறதே.

அநுபல்லவி.

ஆணிலேயொருசிறு குழந்தையின் திருக்கோலம்
ஆகிவளர்பழனி ஆண்டவனேஎன்காலம் - (வீணிலே)

சரணங்கள்.

மானிலந்தனிலுயர் மானிடதேகம்
வகுத்துமதன்பயனை மருவாதனேகம்
ஆனகவலையிலும் பிணியிலுஞ்சோகம்
அடைந்துன்னைத்தியானஞ்செய் யாமல்நாயேன்விவேகம் - (வீணிலே)

மூர்த்திதலந்தீர்த்தம் முறையாய்த்தொழுதென்கர்மம்
மூலைகளைந்துன்னுளாக முடிப்பதனக்குதர்மம்
பார்த்தும்பாராததுபோல் இருந்தின்னமுமேவர்மம்
பண்ணினாலதியாப்பேதையென்செய்வேனென்ஜென்மம் - (வீணிலே)

அன்னைதந்தைகுரு தெய்வமானவிநோதா
அடிமைகொண்டென்னல்லலை யகற்றுமென்மலர்ப்பாதா
சொன்னவிவ்வரந்துரை சுவாமிக்கருள்விதாதா
சுரர்முனிவரரோத்தித் தொழுந்தென்பழனிநாதா - (வீணிலே)

இராகம் - கானடா; தாளம் - ஆதி.

பல்லவி.

வேண்டேன் வேண்டேன் வேண்டேன் வேண்டேன்
வேண்டேன் வேண்டேனே.

அநுபல்லவி.

ஆண்டான்பழனி யப்பன்திருவடி
யதுவேவேண்டுவன் யாதுமெப்போதும் - (வேண்டேன்)

சரணங்கள்.

ஆசமமொழிந்தருளும் விதிவாக்கியம்
அனுசரித்துப்பணி வதுவேசிலாக்கியம்
ஆகநினைந்தையனுக் கடிமைசெய்பாக்கியம்
அல்லாவிந்திர போகசௌபாக்கியம் - (வேண்டேன்)

அடியவர்திருவாய் மலர்ந்தருள்சொல்லை
அன்பாய்மொழிபவர்க் கேதுன்பமில்லை
இடிகனமரமென் றெண்ணுமலேபல்லை
இளித்துமயங்கும்பொய் வாழ்வாந்தொல்லை - (வேண்டேன்)

ஆண்டவனடியவரோ வெகுசொந்தம்
அவரொடுவாழ்வதே பேரானந்தம்
வேண்டும்பழனிநாதன் பாதாரவிந்தம்
விரும்புந்துரைசுவாமியிம் மாயாபந்தம் - (வேண்டேன்)

இராகம் - அமீர்கல்யாணி; தாளம் - ஆதி.

பல்லவி.

ஐயனைப்பாடு ஆனந்தக்கூத்தாடு.

அநுபல்லவி.

உய்யும்வகை இதுசரி
ஓங்கும்பழனி யங்கிரி - (ஐயனை)

சரணங்கள்.

புறங்கூறுதலும் சூதும்
பொல்லாங்கிந்தையும் வாதும்
மறந்துநன்மைகள் யாதும்
மறந்திடாம லெப்போதும் - (ஐயனே)

வெந்துயரமு நோகும்
வினைகளிடர்க ளேகும்
பந்தபாசங்கள் போகும்
பரமஞான முண்டாகும் - (ஐயனே)

தொண்டுபுரிந் தேத்துந்த்ராணி
துரைசுவாமிக் கருள்வாணி
கண்டுதுதிசெய் கல்யாணி
களிக்கும்பால தண்டபாணி - (ஐயனே)

இராகம் - கரகரப்பிரியா; தாளம் - ரூபகம்.

பல்லவி.

இரக்கமில்லையே - சத்ருவினும்
ஏழையோலமிடுவதுன்செவிக்
கேறவில்லையே.

அநுபல்லவி.

பரப்பிரம்மரூப மாயெங்குமெய்யா
யிருக்கும்பழனி வேன்முருகையா - (இரக்கம்)

சரணங்கள்.

நாயினுஞ் சிறியேன் - ஒரு
நாளினுமுனைத் துதிசெய்தறியேன்
ஆயினுமுனை யாண்டானென்னும்
ஆவலாற்கூவி யலறுகின்றேனின்னும் - (இரக்கம்)

தீன தயாளா - என்தன்
தீவினைநீக்கி யாளுந்தாளா
மானமழிக்குங் கவலையால்யானும்
மனநொந்தேனுனக் கெள்ளளவேனும் - (இரக்கம்)

சரவண பவனே - அயனேத்
தளேந்துசூரனேச் சங்கரித்தவனே
பரவுந்துரைசுவாமிக் கருள்குகனே
பாவையரிருவர் மகிழ்நாயகனே - (இரக்கம்)

இராகம் - சங்கராபரணம்; தாளம் - ரூபகம்.

பல்லவி.

இனிசகிக்க வசமா
ஏழைக்கருள தாமசமா.

அநுபல்லவி.

பனிவரையருள் சுகுமாரி
பாலா பழனிமலே வேலா - (இனிசகிக்க)

சரணங்கள்.

மெய்யன்பர்தம்மை விசுவாசம் - கொண்டு
வேண்டியவருட னேஅதிநேசம்
செய்துனேத்துதிக்கும் பத்தியாவேசம்
சேரக்கெடுத்திடும் மனக்கிலேசம் - (இனிசகிக்க)

தீவினேநோயிலெந் நேரம் - உள்ளம்
திடுக்கிடுதேவ ரெனக்காதாரம்
பாவியானுலுமிப் போதுபகாரம்
பண்ணுதிருந்தாலென் மனவிசாரம் - (இனிசகிக்க)

சஞ்சலப்பிணிக்கோர் மருந்தே - சிவ
சங்கரிதரும்செம் பவளக்குருந்தே
அஞ்சலென்றுதுரை சுவாமிநெஞ்சிருந்தே
ஆண்டவனடியார்க் கினியவிருந்தே - (இனிசகிக்க)

இராகம் - தோடி; தாளம் - ரூபகம்.

பல்லவி.

பாராயா கடைக்கண்ணுலெனேப்
பாதுகாப்பவராராயா.

அநுபல்லவி.

ஆளையாவுயிர்த் துணையாமவர்
அம்புவிமீதினில் மெய்யா
தென்பழனிமுரு கையா – (பாளையா)

சரணங்கள்.

சிறந்தசெங்கமலத் திருத்தாளே
மறந்தமுழுமூடனே இவ்வேளே – (பாளையா)

பத்தரிலொருவ னாகவிரும்பி
சித்தங்கனிந்துநீ சற்றேதிரும்பிப் – (பாளையா)

பொறுத்தாலென்பிழை களையல்லாது
வெறுத்தாலாதரிப் பவரிங்கேது – (பாளையா)

வினைகளென்னுங்கூர் வாளாற்கொய்தே
எனைவதைக்காமலே தயைசெய்தே – (பாளையா)

தஞ்சமெனுந்துரை சுவாமிமுன்னின்று
சஞ்சலந்தீர்த்தஞ்ச லஞ்சேலென்று – (பாளையா)

இராகம் – கேதாரகௌளம்; தாளம் – ஆதி.

பல்லவி.

ஆரென்மனத்துயரை யாற்றுவார் – உனை
யல்லாலெவரெனைக் காப்பாற்றுவார்.

அநுபல்லவி.

பாருள்ளோரும்விண் ணேருமற்றோர்யாரும்
பணியுங்கமலபாதா அணிசெய்பழனிநாதா – (ஆரென்)

சரணங்கள்.

தனுகரணபுவனங் கொடுத்து – அவைக்குத்
தக்கபோகங்கொடாமல் விடுத்து
கனவிலுமேயொரு சுகானுபவஞ்செய்யாக்
கடையனுக்குவதழகோ கர்த்தனேமுருகையா – (ஆரென்)

திருவடிநம்புநாயிற் சிறியேன் – உனது
திருவுளமெப்படியோ அறியேன்
குருவடிவாய்வந்தொரு குறைகளும்வாராமல்
குடியீடேறவருள்சற் குருபரா நீயல்லாமல் – (ஆரென்)

சரவணபவா கார்த்திகேயா - சூர
சம்ஹாரவென்னன்னேயர் நேயா
சுரஜனசேவிதா துரைசுவாமிக்குபகாரா
சுத்தமெய்ப்பத்தர்தினம் தொழும்பழனிக்குமாரா - (ஆனென்)

இராகம் - அடாணு; தாளம் - ஆதி.

பல்லவி.

முப்பதுதினங்களுக்குள் எப்படியுமென்கோரிச்கை
முடியக்ருபைபுரிய வேண்டுமையா.

அநுபல்லவி.

எப்புவனங்களும்பணிந் தேத்தப்பழனியில்மெய்யா
யிருக்குந்தெய்வநீயானல் இன்றுமுதல்முருகையா-(முப்பது)

சரணங்கள்.

சின்னஞ்சிறுவயதினில் நீயேயெனக்குக்குல
தெய்வமென்றெண்ணம்வந்தது தொடுத்து - நினதுமலர்த்
திருவடியல்லாதுமற் ருெருவடிவையும்யான்
தியானஞ்செய்தறியேனே அடுத்து
நின்னைநம்புமேழையடி யவனேநெருக்கும்ருணம்
தன்னைத்தீர்த்திடவேவேறு தரவார்நீயித்தருணம்
(முப்பதுதினங்)

வெள்ளம்வருமுன்னேஅணை கோலுவதுநன்மையென
விளம்புவார்கள் ஞாயம் - என்னசெய்யினும்
மேலிட்டுவந்தபின்னது சரிப்படுமோஐயாஅவ்
விதமாகிய வுபாயம்
வள்ளலேயுனதுதிரு வுள்ளத்திற்ருேற்ருதோதீது
எள்ளத்தனையும்வராமல் என்னைக்காக்கத்தவருது
(முப்பதுதினங்)

அகத்தியமுனியேவ லால்சத்திசிவகிரி
யாகுமலைக ளிரண்டு - கொண்டுவந்திடும்
பாசூரனவினன் குடிதனில்வைத்திளேப்
பாறுஞ்சமயங் கண்டு
மகத்துவங்காட்டிவந்த சிவகிரிமிசைமன்னும்
வாலதண்டாயுதபாணி அன்பன்துரைசுவாமிக்கின்னும்
(முப்பதுதினங்)

இராகம் - சஹானா; தாளம் - ரூபகம்.

பல்லவி.

சொல்வதைக் கேள்மனமே - நான்
சொல்வதைக் கேள்மனமே.

அநுபல்லவி.

பல்வகைப்பொய்வழி யினின்றுந்திரும்பிப்
பழனிநாதன்அருள்பெற விரும்பிச் - (சொல்வதைக்)

சரணங்கள்.

குற்றம்படமொழி யாதே - கொடுங்
கோபத்தினாலழி யாதே - நல்ல
பத்தர்தமைப் பழியாதே - அந்தப்
பாவங்களுன்றனை விட்டொழியாதே
(சொல்வதைக்)

வெண்ணீறுடலினிற் பூசி - ஐயன்
வேண்டுந்திருப்புகழ் வாசி - இதில்
எண்ணமில்லாமலே கூசி - நீ
யிருந்தாலென்ன பலனடைவாய்சீசீ

(சொல்வதைக்)

துட்டரைப்போயடுக் காதே - நல்லோர்
துணையைநீவிடுக் காதே - என்றுங்
கெட்டபெயரொடுக் காதே - குணக்
கேடனுக்கோர்நன்மை யுங்கொடுக்காதே
(சொல்வதைக்)

பாபத்தொழிலைத் தேடாதே - பிறர்
பாரியர்தம்மை நாடாதே - பொல்லா
ஆபத்தில்வெம்பி வாடாதே - சற்றும்
அன்பில்லாலோபனை நம்பிப்பாடாதே

(சொல்வதைக்)

ஆகமஞ்சொல்வழி நில்லு - மூன்
றுசையைவேரறக் கல்லு - சிவ
யோகநெறிதனிற் செல்லு - மாறு
தின்வாயினால்முரு காவென்றுசொல்லு

(சொல்வதைக்)

கூத்தாட்டமானசம் சாரம் - அதைக்
கொண்டாடுவதுப சாரம் - ஸ்கந்த
மூர்த்திபதாநமஸ் காரம் - செய்து
முப்பொழுதுந்துதி முக்திக்காதாரம்

(சொல்வதைக்)

நாயேன்துரைசுவாமி யோது - மிந்த
ஞாயங்களைமற வாது - மிகு
நேயமாக்கொள்வாயெப் போது - மென்ற
னெஞ்சமேயாதொரு குறைவராது

(சொல்வதைக்)

இராகம் - சங்கராபரணம்; தாளம் - ஆதி.

பல்லவி.

இது ஞாய மாகுமா - சாமி.

அநுபல்லவி.

பதுமாசனன்துதி பாதசரோருகா
பத்தர்தொழும்பழனி மாமலைமுருகா - (இதுஞாயம்)

சரணங்கள்.

அன்னைதந்தைகுரு தெய்வமாகித்துதி
யடியார்தமைரக்ஷிக்கும் ஐயாவுனையேகதி
யென்னநம்புமேழை யெனவறிந்துநீயே
என்னையாண்டருள்செய்யவே மனதிரங்காயே

(இதுஞாயம்)

பாதகனையுன்தந்தை பரிந்தளித்ததும்பொய்யா
பாவியானாலுமென்மேற் பக்ஷம்வைத்தருள்செய்யா
யேதுபிதாநெறிபுத் திரர்க்குரித்தன்றோமெய்யா
யிருந்தாற்கவலையொழித் தெனையாளாதேனோஐயா

(இதுஞாயம்)

தீனதயாளுவெனும் பெயருக்கழகிதுவா
தீனன்துரைசுவாமிதுதி செயுஞ்சரவணபவா
ஈனவசுரர்கள்சங் காரவயில்வேலவா
எந்தாய்குஞ்சரிவள்ளி நாயகாசிவசிவா

(இதுஞாயம்)

இராகம் - செஞ்சுருட்டி; தாளம் - சாப்பு.

பல்லவி.

பாபிஷ்ட்டிஜென்மம் ஏதுக்கோ - ஆத்ம
லாபமில்லாத தீதுக்கோ வாதுக்கோ.

அநுபல்லவி.

கோபலோபமோகங் கொண்டதனுல்வந்த
தாபந்தீர்க்கும்பழனிச் சாமிநாதாஇந்த - (பாபிஷ்ட்டி)

சரணங்கள்.

மட்டவிழ்பதஞ்சென்னி வணங்கியருளடைய
எட்டுணையுநினைந்தி டாதமுழுமடைய
(பாபிஷ்ட்டி)

ஓதுமெப்பிறப்பினு முயர்மானிடங்கிடைத்த
போதுங்காணுதிரண்டு புண்போல்கண்கள்படைத்த
(பாபிஷ்ட்டி)

வளைபோலிரண்டுதுளை வாய்த்தநாசியிருந்தும்
விளையும்நின்பரிமளம் விரும்பாமல்வருந்தும்
(பாபிஷ்ட்டி)

எந்தைநின்திருப்புக ழினைக்கேட்குதலில்லாத
பொந்துபோலிருசெவி பொருந்திடும்பொல்லாத
(பாபிஷ்ட்டி)

அடியர்துதிசெய்தமிழ் அன்பாய்க்கண்ணீர்சொரியும்
படிவாயாரப்பாடாமல் பட்டிமாடாய்த்திரியும்
(பாபிஷ்ட்டி)

நாண்மலராலுன்பூசை நாளுஞ்செய்யாதிருக்கும்
தூண்போலிரண்டுகரம் தொங்கவிட்டுமசைக்கும்
(பாபிஷ்ட்டி)

மூர்த்திதலம்தீர்த்தம் முறைசெலக்கால்கோணும்
பாத்திரமீதென்றறியாப் பார்க்குச்சுமையாய்த்தோணும்
(பாபிஷ்ட்டி)

கண்ணேறுபலவினை கலங்கியோடப்பூசும்
வெண்ணீறுருத்திராக்ஷம் மீதிலணியக்கூசும்
(பாபிஷ்ட்டி)

வாதனைதீர்ந்துன்னை வாழ்த்தஅன்புபெருக்கும்
பாதமலரைத்தியானம் பண்ணமறந்திருக்கும்
(பாபிஷ்டி)

எள்ளளவுபோதமுன் னிணையடிதனைத்தொழும்
உள்ளன்பென்றுமிலாமல் உயிர்போம்போதெண்ணியமும்
(பாபிஷ்டி)

பத்தர்புகலும்பணி பரிந்துசெய்யாமல்மாய
வித்தைசெய்மாதர்கள் விளம்பும்ஏவல்செய்தீய
(பாபிஷ்டி)

மண்பொன்மனைவிமக்கள் மார்முதலாமிரு
நண்பாஞ்சார்பினைநம்பி நரகுக்கிரையாய்வரும்
(பாபிஷ்டி)

வார்த்திபத்திலும்மனை மக்களுக்கென்றிலவு
காத்தகிளிபோலாகக் காசுக்கலைந்துலவு
(பாபிஷ்டி)

தீயவையில்லாப்பொருள் தேடிநல்லறஞ்செய
ஞாயமுணர்ந்திடாமல் நடைப்பிணமாகிய
(பாபிஷ்டி)

முருகாவென்றுள்ளக்குறை முறையிடாமல்விழிக்கும்
இருகால்விலங்கென்றுனை யேத்துந்தொண்டர்பழிக்கும்
(பாபிஷ்டி)

குருவாய்துரைசுவாமிதன் குறைகளெல்லாந்தீர
அருளாவிடில்பழனி யப்பாகுணவிகார
(பாபிஷ்டி)

இராகம் - சஹனு; தாளம் - ரூபகம்.

பல்லவி.

பெண்டுபிள்ளை யென்றுபிரமைகொண்டு
பண்டுதேடுவதி லென்னபலனுண்டு.

அநுபல்லவி.

தொண்டுகொண்டு பழனிமாமலைத்
துரையைக்கண்டு துதித்தாற்பலனுண்டு - (பெண்டு)

சரணங்கள்.

சாரமேது மில்லாதசமு
சாரபாரஞ் சுமந்து
தணல்படுமிளந் தளிர்போல்நெஞ்சேநீ
சஞ்சலத்தினல் வெந்து
கோரவிகாரங்கொண் டையனைமறந்து
கொடும்பாவஞ்செய்வ தோபயன்பிறந்து
(பெண்டு)

சொந்தமெனநம்பு மனைவிமக்களும்
துணையாகவரக் கூடுமோ
ஸ்தூலதேகத்தையும் பிரிந்துபோமுயிர்
துணையென்றிவனைத் தேடுமோ
பந்தத்தழுந்துவதில் அருள்நாடுமோ
பாழ்மனமேயுன்னஞ் ஞானமோடுமோ
(பெண்டு)

நிஜமாகமயக் கிடுமிப்பொருள்கள்
நிலையல்லவெனத் தெரிந்து
நெஞ்சமேதென்பழ னிமலைத்தெய்வத்தை
நிலையாகஅன்பு புரிந்து
பஜனைசெய்துனை சுவாமியைப்பரிந்து
பாதுகாக்கும்ஜய னைத்துதிதிரிந்து
(பெண்டு)

இராகம் - பியாகடை; தாளம் - ஆதி.

பல்லவி.

நானென்ன செய்வேன் - எந்
நாளிலுனைத் துதித்துய்வேன்.

அநுபல்லவி.

மானன்னவிழியுமை மகிழுமோர்சிறுபாலா
வளரும்பழனிமலை வாழுங்குழந்தைவேலா - (நானென்ன)

சரணங்கள்.

ஒட்டிட்டுக்கொண்டுபரா முகமாயுள்ளவர்போலே
ஓகோநீயுமிருந்தால் உள்ளக்கவலையாலே
பட்டிடுந்துன்பந்தவிர்த்துப் பத்தனுக்காதொருக்காலே
பாவியாக்கிவேடிக்கைநீ பார்த்தாலிப்புவிமேலே

(நானென்ன)

பஞ்சகிருத்யம்செய்தருளும் பரமபுருஷனீயே
பால்கனைப்பக்ஷமாய்க்காப் பாற்றுதலொழித்துத்தாயே
வஞ்சகம்வைத்தாலப்பிள்ளை வளர்ந்திடுமோசொல்வாயே
வந்துகருணைசெய்ய வர்மஞ்செய்திடில்நாயேன்

(நானென்ன)

இகம்பரம்தனிலுறு சுகம்பெறப்பெரும்பூமி
யெங்குமுள்ளவரோத்தும் இறைவனேதுரைசுவாமி
யகந்தனிலுறைந்தருள் ஐயனேயபிராமி
யளிக்குந்தென்பழனி யப்பாமுத்துக்குமாரசாமி

(நானென்ன)

இராகம் - ப்யாக்; தாளம் - ஆதி.

பல்லவி.

பாவியென்று கைவிடாதே
பராமுகஞ்செய் திடாதே.

அநுபல்லவி.

கூவிக்குறை சொல்லியுனைக்
கும்பிடுகின்றே னென்றனை - (பாவியென்று)

சரணங்கள்.

பத்தியெள்ளளவு மில்லாப்
பாதகனுன்புகழ் சொல்லாப்
பித்தனல்வழியி னில்லாப்
பேதைமுழுமூடன் பொல்லாப்-(பாவியென்று)

பஞ்சசெந்தணலாற் படும்
பான்மைதன்பத்தில் னைந்திடும்
நெஞ்சுடையேனெனைச் கெடும்
நெறியினிற்சேர்த்துக் கொடும்-(பாவியென்று)

நாயேனுனைத்துதி சுகா
னந்தவெள்ளத்தின் முழுகா
தேயலைகின்றேன் முருகா
சித்தம்வைத்தருள்வாய் மகா-(பாவியென்று)

தீவினையினிற் புரண்டு
திகைக்கிறேனுன் னிரண்டு
சேவடிமலர்க்குத் தொண்டு
செயவருள்கோபங் கொண்டு-(பாவியென்று)

தென்பழனிப்பெரு மானே
தெய்வங்கட்கெல்லாம் பிரானே
அன்பாய்த்துரைசுவாமி நானே
ஆதாரவாய்நம்பி னேனே-(பாவியென்று)

இராகம் - உசேனு; தாளம் - சாப்பு.

பல்லவி.

எப்படி சகிப்பேன் - ஏழையடிமை
யெவ்விதம் சகிப்பேன்.

அநுபல்லவி.

மைப்படியுங்கண்ணி வள்ளிநாயகிலோலா
வாலாம்பிகையருளும் பாலா பழனிவேலா - (எப்படி)

சரணங்கள்.

உன்பாதம்நம்பி - இருக்கும்பேதை - உள்ளம்வெதும்பி
யென்பாயுருகிப்பிணி யாலுங்கவலையாலும்
எங்கோரமுந்துயர்செய் இடர்தனையினிமேலும் - (எப்படி)

மானிடதேகி - யாகவகுத்து - மாருதரோகி
யானநிலையில்விடுத் தருந்துயர்பெருக்கினால்
ஆலைவாயிற்கரும்பு போலெனைநெருக்கினால் - (எப்படி)

குற்றங்கள்யாது - செயினுமென்மேல் - கோபம்வையாது
பெத்தவனீபொறுத் தாள்வதல்லவோசரி
பிணியினால்வருத்துவதோ அதைப்பரிகரி - (எப்படி)

உள்ளநாள்வரையும் - புலம்பவோவுன் - உளமென்றுகரையும்
எள்ளளவாயினுமுன் கிருபாகடாக்ஷம்வையா
திருந்தால்வருந்தாமல்நா னென்செய்வேன்முருகையா - (எப்படி)

கடைக்கண்ணாற்பார்த்தே - எனதுவினை - களையறத்தீர்த்தே
அடைக்கலமெனப்பணிந்து துனைசுவாமிதுதிதேவா
அஞ்சலஞ்சலென்றருள் பழனிமஹானுபாவா - (எப்படி)

இராகம் - காம்போதி; தாளம் - ஆதி.

பல்லவி.

சராசரவுயிர்க ளெலாமருள்செய்குரு
பரா நிராமய மாகியதற்பர.

அநுபல்லவி.

சுராதிபர்க்கருள் சதுரா பராவுசே
கரா கிருபாகரா ஈராறுகர - (சராசர)

சரணங்கள்.

ஜலசலோசன சண்முகவிலாச
சதானந்தசரவணபவ சுதேகா
இலகுவீரசங் கிராமவடிவே
லேந்தும்அதிரிர் வாகா
உலகம்யாவுமோர் நொடியினில் வலம்வரும்
உசிதநடனசிகிவாகன நாகா
சலவாச குகேச ஜகதீச
சஹோதர நவவீரசமூகா - (சராசர)

தீனரக்ஷக அசுர குலாந்தக
திவாகரகிரண மணிமய ஹாரா
ஞானபக்த ஹிர்தயாலய மருவிய
நளினயுகள சரணா
வானுலாவிய சுரகண வந்தித

மனோன்மணிசுகுணி மகிழும்விதரண
மானசரத விரதர்துதிசெய்யும்
வசிகரண தவளரத்னா பரண - (சராசர)

இராகம் - சங்கராபரணம்; தாளம் - சாப்பு.

பல்லவி.

எப்படிகடைத் தேறுவேன் - ஐயனே
என்றுநா னீடேறுவேன்.

அநுபல்லவி.

மைப்படியுங்கண்ணி வள்ளிநாயகிலோலா
வளரும்பழனிமலை வாழுங்குழந்தைவேலா - (எப்படி)

சரணங்கள்.

கர்த்தனேநாயேனெந்த நாளினுமேபல
கவலைகொண்டுநோய்களி னுலுஞ்சிந்தையுழல
வைத்தனையேநானென்ன பிழைசெய்தாலுமவல
மானவனுகவிட லாமோதீமையகல
வனையுமுன துவெண் ணீற்றுமருந்தால்
வினையையொழித்தரு ளாமலிருந்தால் - (எப்படி)

வாழ்நாளெல்லாமுன து மலர்த்திருவடிமீது
மனம்வைத்தன்பாய்த்துதித்து மகிழ்வுடன்வாழாது
பாழ்நாளாகக்கழித்தால் ஜன்மசாபல்லியமேது
பத்தனுக்காமற்பாவி யாக்குவ துதகாது
பக்ஷம்வைத்தெனக் கருள்செய்யென்றால்
லக்ஷியம்செய் யாமல்நின்றால் - (எப்படி)

பரமன்தீக்கட்பொறியாய்ச் சரவணத்தில்வளர்ந்து
பனையமுதுண்டுஅம்மை பாகனுளங்கிளர்ந்து
தரவயில்வேல்கைக்கொண்டு சூரனும்பிளந்து
தையல்குஞ்சரியைவள் ளியைநன்மணம்புணர்ந்து
தருக்குந்தேவாதுரை சுவாமியடிமையா
யிருக்கும்படிக்கருள் பழனிமுருகையா - (எப்படி)

விருத்தம்.

இதுக்கென்றோ வெனைவிதித்தாய் முருகா மக்க
ளெனப்பிறந்தார் பெறும்பேறிற் சிலகுறைந்தா லெவரும்
அதுக்கன்றோ வமையாது சஞ்சலிப்பா ரந்தோ
அணுவளவோர் பேறிலனென் னல்லல்கண்டார் கண்ணிற்
சதுக்கென்று நீர்வரவே மனங்கரைவார் படுமென்
சங்கடமோர் விதமலவே பற்பலவா யிருந்தால்
எதுக்கென்று நான்சஞ்ச லப்படுவே னையா
ஏதுமறி யாப்பேதை யென்னசெய் திடுவேன்.

இராகம் - கேதாரம்; தாளம் - சாப்பு.

பல்லவி.

எதுக்கென்று நான்சஞ்சலப் படுவேன்
ஏதுமறியாப்பேதை யென்னசெய்திடுவேன்.

அநுபல்லவி.

மதுக்கொன்றைமாலையணி மகதேவர்க்கருகா
மகிழ்ந்தாடல்செய்பழனி மாமலைவாழ்முருகா-(எதுக்கென்று)

சரணங்கள்.

முழுமூடனாகி விட்டதற்கோ - சற்றும்
மூத்தோர்சொல்வார்த்தைகே ளாமற்கெட்டதற்கோ
பழுதானசெய்கைகளாற் பாவமேவிட்டதற்கோ
பக்தியில்லாமல்வீணிலே பாடுபட்டதற்கோ
(எதுக்கென்று)

பொருள்தேடும்வகை கூடாததற்கோ - புல்லரைப்
போற்றுவதொழிந்துன்திருப் புகழ்பாடாததற்கோ
அருள்கூடுஞ்செயலறிந் ததனைநாடாததற்கோ
அன்பர்பாததூளியென் தலையிற்சூடாததற்கோ
(எதுக்கென்று)

அல்லலில்நாள் கழிவதற்கோ - திரு
வடிதொழஅன்பிலாது நெஞ்சழிவதற்கோ
பல்வகையாந்துற் குணங்களொழிவதற்கோ
பாழுங்கும்பிவளர்க்கபொய் பலவாய்மொழிவதற்கோ
(எதுக்கென்று)

உடுப்பதற்கோ வுண்ணுவதற்கோ - வீணர்
உறவைவிட்டுன்னடியார் தமைநண்ணுவதற்கோ
அடுப்பவர்க்குதவியில்லா தகவுண்ணுவதற்கோ
ஆவிகடைத்தேறும்வித மதனைப்பண்ணுவதற்கோ
(எதுக்கென்று)

சஞ்சலங்களொழிந்தன் திருப்பா - தாரவிந்
தந்தனைமறவாமற் றுதிவரமளிப்பா
யஞ்சலெனத்துணைசுவா மியையாள்சூரன்பிளப்பா
யறுந்துவிழவேலேவும் ஐயாபழனியப்பா
(எதுக்கென்று)

இராகம் - ஆனந்தபைரவி; தாளம் - சாப்பு.

பல்லவி.

தண்ட தர மூர்த்தி - நான்
சஞ்சலிப்பதுவோ நேத்தி
அஞ்சலென்றருள்வாய் கீர்த்தி.

அநுபல்லவி.

எண்டிசையெல்லாந்தேடி னுலுமென்போலெவரா
யினும்பாதகர்களிருப் பாரோ ஓம் ஹர ஹரா - (தண்டதர)

சரணங்கள்.

பழனி மலை மேலே - இருந்து
பத்தருக்கருள்செய்யும்வி
சித்ரம்நான் கண்டதனாலே
தொழுதுன்பாதம்நம்பினேன் சோதித்தாலென்செய்வேனே
சுத்தசாட்குண்ணியபர மானஎம்பெருமானே
(தண்டதர)

போதகுரு நாதா - என்
பொல்லாமிடிபிணிக
ளெல்லாமகற்ற லாகாதா
ஆதரவானகுல தெய்வம்நீதானேயன்றோ
அடியேனுதரவில்லார் போலேஅஞ்சுதனன்றோ
(தண்டதர)

சித்ரமயில் வீரா - உன்
சேவடிநம்புந்தீனர்கள்
ஆவல்கொள்ளும் ஆதாரா
பற்றுந்துரைசுவாமியைப் பராமுகஞ்செய்யாதே
பத்துலக்ஷம்சரணமென் மேற்கபடம்வையாதே

(தண்டதர)

விருத்தம்.

இராகம் - ஸ்ரீரஞ்சனி; தாளம் - ஆதி.

வேதமுடிக்கு முடியாக விளங்குந்தண்டை யணிபதும
பாதமெளியேன் புன்றலையிற் பதித்தாரியனு யெழுந்தருளிப்
போதநெறிதன் னிற்செலுத்திப் பொய்யிற்புலம்பி நைதலொழித்
தாதரிப்பாய் தென்பழனி யப்பாவொப்பி லாமணியே. (க)

வினைத்துன்பனேனென் புறத்தகத்தும் விளங்கும்பொருணீ எனவுளத்தி
னினைத்துன்றிருத்தாண் மலர்க்கணன்பு நிலைக்கவடிமைக் கருள்புரிவாய்
கனைத்துவருசூ ருடல்பிளந்த கதிர்வேலரசே தொண்டர்பிழை
அனைத்தும்பொறுக்குந் தென்பழனி யப்பாவொப்பி லாமணியே. (உ)

உற்றார்பெற்றார் பெண்டிர்மக்க ளோடுமாடு வீடுவயல்
வற்றாத்தடஞ்சேர் சோலைநவ மணிபொன்மணிகள் வலியழகு
கற்றாய்புலமை யுடையார்நின் கருணைகலந்தவ் விருவகைப்பற்
றற்றார்க்கிணையோ தென்பழனி யப்பாவொப்பி லாமணியே. (ங)

தூயநின்மெய் யருளுதிலோர் துரும்புமுலகம் படைத்தன்முத
லாயமும்மூர்த் தியின்றொழில்க ளாற்றுமென்று ரான்றோர்கள்
பேயனுயரவ் வருள்வாழ்வு பெறுமாறளிப்பாய் குன்றெடுத்த
ஆயன்மருகா தென்பழனி யப்பாவொப்பி லாமணியே. (ச)

நெஞ்சங்கனாந்து நின்றிருத்தா ணினைந்துவாயா ரப்பாட்டிக்
தஞ்சமெனநின் சரணடைந்து சனனவாரி யாழ்த்துமல
வஞ்சம்போக்கி மனந்திருத்தி வாழ்த்துன்னடிமை யாகவெனை
யஞ்சலென்றாள் தென்பழனி யப்பாவொப்பி லாமணியே. (ரு)

வேணிப்பரமர் மகிழ்குருவே வேண்டுமன்பர்க் கருடருவே
மாணிக்கக்குன் றேதுரைப்பெண் குறப்பெண்ணிருகண் மணிப்பாவாய்
வாணிக்கதிபன் பணிபாதா மறவாதுனையான் பரவவருள்
ஆணிப்பொன்னே தென்பழனி யப்பாவொப்பி லாமணியே. (சு)

லாலி.

இராகம் - கரகரப்பிரியா; தாளம் - ஆதி.

லாலி லாலி மனோ லயநயகீதா
சீலி விசாலிதரும் தென்பழனிநாதா - (லாலி)

வர்னகலாபமயில் வாகனவீரா
சொர்னரத்நாபரண ஜோபிதசிங்காரா - (லாலி)

அதிவிதரணகரு ணாகரயோகா
மதிவதனபவள வர்னசுதேகா - (லாலி)

பிரமனைச்சிறைசெய்கெம் பீரப்ரதாபா
சுரர்கள்பணியுஞ்ஸ்வயஞ் சோதிஸ்வரூபா - (லாலி)

வனசரர்மகிழெந்தாய் வள்ளிமனோகரா
தனயன்துளசுவாமிவந் தனைசெயுங்குருபரா - (லாலி)

மங்களம்.

இராகம் - கானடா; தாளம் - ஆதி.

பல்லவி.

நெய்வேற்கரா குமரா துதிசிவகிரி
நிலையா நிமலா மங்களம்.

அநுபல்லவி.

வையமீதிலடி யார்களுக் கருள்செய்ய
வருமுருகையா மங்களம் - (நெய்வேற்)

சரணங்கள்.

யோகா வுயர்பன்னிரு வாகா அமரர்க்கருள்
தியாக பவதுதே மங்களம்
சோகமோகமகல் மாதவர் பணியும்வி
வேகா பவதுதே மங்களம் - (நெய்வேற்)

தூயா மறைபகரும் வாயா குறவனிதை
நேயா பவதுதே மங்களம்
மாயமாயவசு ராந்தக விஜயகாங்
கேயா பவதுதே மங்களம் - (செய்வேற்)

தாதா நளினமலர்ப் பாதா தேவர்சேனுச
மேதா பவதுதே மங்களம்
வேதகீதஸ்ரவ ஞானந்த சண்முக
நாதா பவதுதே மங்களம் - (செய்வேற்)

வீரா சகஸ்த்திரகோடி மாரா மலர்கடப்பந்
தாரா பவதுதே மங்களம்
க்ஷீரசோரஅரி மருகா நடனம
யூரா பவதுதே மங்களம் - (செய்வேற்)

எந்தாய் தந்தைகுருதெய் வந்தா ஞகியளிக்கு
மைந்தா பவதுதே மங்களம்
சந்ததம்தனயன் துரைசுவா மிக்கருள்செய்
கந்தா பவதுதே மங்களம் - (செய்வேற்)

பழனிஆண்டவர்கீர்த்தனை

முற்றிற்று.

முருகையன் துணை.

திருவொற்றியூர் தியாகர்பேரில்

கீர்த்தனம்.

இராகம் - சங்கராபரணம்; தாளம் - ஆதி.

பல்லவி.

த்யாகராஜேஸ்வரா கங்காதரா
தீனதயாபரா ஹரா ஹரா.

அநுபல்லவி.

சோகரோகநிவாரண வேதஸ்ரவண
துல்யாதிபுரி த்ரிபுரசுந்தரி ரமண - (த்யாக)

சரணம்.

பணமணிநாககங் கணகதரவரா
பாதாரவிந்தயுகா சதாசிவசங்கரா
குணநுபவபக்த கோடிசம்ரக்ஷண
கோரஹாலாஹல கரேவிஷ பக்ஷண - (த்யாக)

திருவொற்றியூர் வடிவாம்பிகையம்மன்

கீர்த்தனம்.

இராகம் - ஆனந்தபைரவி; தாளம் - ஆதி.

பல்லவி.

வடிவாம்பிகை யுமையே - நித்தியசுக
வாழ்வுதந்துகாத் தருளெமையே.

அநுபல்லவி.

அடியாரெண்ணப்படியே அளிக்குங்க்ருபாகரி
அகிலபுவனேஸ்வரி ஆனந்திஆதிபுரி - (வடி)

சரணங்கள்.

பாரதிநுதி பார்வதி - சதுர்வேத
பாராயணிநாராயணி பங்கஜாசனயுவதி
தாரகபிரம்மஸ்வ ரூபிணிதரணி
சற்சனசேவித சரோருககாரணி

(வடிவாம்பிகை)

தீனஜன தயாபரி - சுகுணபக்த
சித்தாம்புயவாசினி தேவியாதிசங்கரி
கானலோலிகல் யாணி விசேஷணி
ஸ்கந்தஜனனிசந்திர வதனி நாகபூஷணி

(வடிவாம்பிகை)

ஆனந்த பைரவி - தியாகராஜேஸ்வ
ராத்மநாயகிவர தாயகிசுக்கியாஞேற்பவி
மீனகேதனபரி பாலினி நீலகந்தரி
வேண்டுந்துரைசுவாமிக்கருள் புரித்ரிபுரசுந்தரி

(வடிவாம்பிகை)

வடிவாம்பிகையம்மன்கீர்த்தனம்

முற்றிற்று.